# <u>இராமநாதபுரம் நகராட்சி</u>

இராமநாதபுரம் நகராட்சியில் 2019 ஜீலை மாதத்திற்கான நகர் மன்ற அவசர கூட்டம் 12.07.2019 ந் தேதி காலை 10.35 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்:–

**<u>பொருள் 1</u>**

இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் ஜீலை 2019–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** மன்றம் பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.947</u>–** பதிவு செய்யப்பட்டது

**<u>பொருள் 2</u>**

இராமநாதபுரம் நகராட்சி பொறியாளர் ஜீலை 2019–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** மன்றம் பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.948</u>–** பதிவு செய்யப்பட்டது

**<u>பொருள் 3</u>**

இராமநாதபுரம் நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் அலுவலக ஈப்பு வாகன எண் TN65 H-0315'' பழுதாகி உள்ளதற்கு பழுதுநீக்கம் அகற்றி இயக்கி கொடுக்கும் பணிக்கு 01.07.2019 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக மூன்று விலைப்புள்ளிதாரர்கள் வரப்பெற்றன.

| வரிசை எண் | வரப்பெற்ற விலைப்புள்ளிதாரர்களின் பெயர்கள் | வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|
| 1 | M/s.Globel Cars,<br>No-16/1B, Melakkal Main Road,<br>Near-Check Post,<br>Kochadai, Madurai-625 016, | 99,450/- |
| 2 | M/s.C.G.Cars,<br>RS.No.16/1B, Melakal Main Road,<br>Madurai-625 016. | 1,00,850/– |
| 3 | M/s.Win Motors,<br>No.327/5, Ponmeni Main Road, Near-Dolphin School, | 1,02,550/– |

| | By-Pass Road, Madurai-625 010 | |
|---|---|---|

மேற்கண்ட வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிதாரர்களில் குறைந்த விலைப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள M/s.Globel Cars,No-16/1B, Melakkal Main Road, Near-Check Post,Kochadai, Madurai-625 016,அவர்களது விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு– 1)**மன்றம் அனுமதிக்கலாம்.

**2)**இப்பணி அலுவலக வாகன பணி என்பதால், அவசர அவசியம் முன்னிட்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும், மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்: 1856/2019/இ1

<u>**தீர்மானம் எண்.949**</u>– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

<u>**பொருள் 4**</u>

இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம் 2019–20, புதிதாக அமைக்கப்பட்ட Air வால்வுக்கு தொட்டி கட்டும் பணிக்கு 09.07.2019–ந் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் வரப்பெற்றன.

| வ.எண். | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் (ரூ) | விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1 | திரு.எம்.கே.திருமுருகன்<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 50,000/– | 0.15% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.கே.சத்தியநாதன்<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 50,000/– | 1.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிதாரர்களில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.எம்.கே.திருமுருகன், இராமநாதபுரம் அவர்களது 0.15% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>– மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 2090/2019/இ1

<u>**தீர்மானம் எண்.950**</u>– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 5**

இராமநாதபுரம் நகராட்சி தூய்மை இந்தியா இயக்க திட்டம் 2018–2019ன் கீழ் சிறிய இலகுரக வாகனம் (LCV) 3–எண்ணம் விநியோகம் செய்யும் பணி, மற்றும் குடிநீர் நிதி திட்டம் 2018–2019ன் கீழ் Providing Internal Plumping Works for Water Supply HSC'S 3500 – எண்ணம் இணைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் வெளியிட்ட வகையிலும் கீழ்க்கண்டவாறாக விளம்பரதாரர்களுக்கு பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| விளம்பரதாரர்களின் பெயர்கள் | பில் நம்பர் மற்றும் நாள் | பில் தொகை ரூ. |
|---|---|---|
| 1)Deccan Chronicle,Tamilnadu | AAA/0012/19-20, Date.03.06.2019 | 34.650/– |
| 2)Makkal kural,TamilNadu | AAA/0012/19-20, Date.03.06.2019 | 33,750/– |
| | CGST 2.50% | 1,710/– |
| | SGST 2.50% | 1,710/– |
| | Total | 71,820/– |

**அலுவலக குறிப்பு**– 1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்கண்ட தொகையான ரூ.71,820/–ஐ Accord Advertisement Agencies,Chennai – 600 034 அவர்களுக்கு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.3877/2014/இ1

**தீர்மானம் எண்.951**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 6**

இராமநாதபுரம் நகராட்சி, வருவாய் நிதி 2019–20, தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கான தனியார் மூலம் 3 –மின்கம்பியாளர் அமர்த்தும் கொள்ளும் பணிக்கு 12.07.2019–ந் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் பெயர்கள் | மதிப்பீடு லட்சத்தில் (ரூ) | வழங்கியுள்ள விலைவிகிதம் கூடுதல் /குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.சரவணன், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம். | 3,00,000/- | 1.49% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.கே.சத்தியநாதன், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம் | 3,00,000/- | 0.64% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களில் குறைந்த விலைவிகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.கே.சத்தியநாதன், இராமநாதபுரம் அவர்களது 0.64% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு;</u> – 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி தெருவிளக்கு பராமரிப்பு என்பதால் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்ஒப்புதல் பெற்று, பணி உத்திரவு மற்றும் மாத ஊதியம் பட்டியல் தொகை வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்; 2092/2019/இ1

**<u>தீர்மானம் எண்.952</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் 7</u>

இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் நிதி திட்டம் 2019–20, குடிநீர் மேல்நிலை நீர் தேக்க தொட்டியில் பகிர்மான குழாய்களில் Sluice வால்வு பொருத்தும் பணிக்கு 09.07.2019–ந் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் பெயர்கள் | மதிப்பீடு லட்சத்தில் (ரூ) | வழங்கியுள்ள விலைவிகிதம் கூடுதல் /குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.சரவணன்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 2,30,000/- | 0.15% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 2,30,000/- | 1.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களில் குறைந்த விலைவிகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சரவணன்,இராமநாதபுரம் அவர்களது 0.15% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு;</u> – மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்; 2091/2019/இ1

**<u>தீர்மானம் எண்.953</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் 8</u>**

இராமநாதபுரம் நகராட்சிப் பகுதியில் கட்டிட அனுமதி கோரி பெறப்படும் விண்ணப்பத்தின் பேரில் வசூலிக்கப்படும் கட்டிட உரிமையாணை கட்டணங்கள் அரசு ஆணை நிலை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(ந.நி) நாள்.04.02.2019 மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019, விதி எண் 14ன்படி நகராட்சியில் வழங்கப்படும் கட்டிட உரிமம் காலம் மூன்றாண்டிலிருந்து ஐந்தாண்டுகளாக மாற்றியமைக்கப்பட்டதின்படி கட்டணங்கள் திருத்தியமைக்கப்பட்டு திருத்திய உரிமையாணை மற்றும் இதர கட்டணங்கள் நிர்ணயம் செய்து 01.07.2019 முதல் நகர்மன்ற தீர்மான எண்.864 நாள்.08.03.2019–ன்படி வசூல் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்விளம்பரம் தினசரி நாளிதழ் (The Daily Thanthi) மூலம் 02.06.2019–ம் தேதி விளம்பரம் செய்யப்பட்டுள்ளதற்கு விளம்பர கட்டணம் ரூ.52,391/– வழங்க மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு;</u>** – மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.839/2019/எப்1

**<u>தீர்மானம் எண்.954</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் 9</u>**

இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் விநியோகம் வார்டு எண்–8, வசந்த வேணி நாச்சியாார் தெரு பகுதிக்கு குடிநீர் விநியோகம், சுவாமி விவேகானந்தர் சாலை பிரதானக் குழாயில் இருந்து செல்கின்றது. அப்பகுதியின் கடைச் தெருவிற்கு தண்ணீர் சென்றடையவில்லை. அது மேடான பழுதியானதால் குடிநீர் சென்றடையாமல், பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே இதனை சரி செய்யும் பொருட்டு அத்தெருவின் வடக்குப்பகுதி காட்டுப்பிள்ளையார் கோவில் முதல் தெருவில் இருந்து வரும் பிரதான குழாயில் இருந்து, குடிநீர் குழாய் நீட்டிப்பு செய்து வசந்த வேணி நாச்சியார் கடைசித் தெரு வரை பதித்து இணைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.85,000/–திற்கு குடிநீர் விநியோகம் மூலம் பணிமேற்கொள்ள நகர்மன்ற நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு;</u>** – மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.955</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் 10</u>**

இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம் 2019–2020, கழிவு நீர் சேகரிப்பு அமைப்புகளில் உள்ள மனித ஆய்வு குழிகளில் மணல் மற்றும் திடப்பொருட்கள் சேகரம்

ஆகி இருப்பதால் அடிக்கடை அடைப்பு ஏற்பட்டு பொது மக்களுக்கு சிரமம் ஏற்படுகின்றது. இதனால் மனித ஆய்வுக்குழிகளில் உள்ள மண் மற்றும் குப்பைகளை அகற்ற தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2,50,000/–லட்சத்திற்கு நகர்மன்ற நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு;** – மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.956**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 11**

இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம், தேசிய நெடுஞ்சாலை துறையினரால் நகராட்சி பகுதிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலைகள் விரிவாக்கம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. தேசிய நெடுஞ்சாலையினை விரிவாக்கம் செய்யும் போது சாலையில் அமையப் பெற்றுள்ள மனித ஆய்வுக் குழிகளை உயர்த்தப்பட வேண்டியுள்ளது. எனவே மேற்படி மனித ஆய்வு குழிகளை உயர்த்துவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.75,000/–த்திற்கு பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ள நகர்மன்ற நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு;** – மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.957**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 12**

இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம், கழிவுநீர் சேகரிப்பு அமைப்புகளில் உள்ள Pumping Station–ல் இருக்கின்ற Grit Well, Collection Well, Suction Well மற்றும் Screen Well –ல் உள்ள கழிவு மண்களை அகற்ற செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. மேலும் கழிவு மண்கள் சேகரம் ஆகி இருப்பதால் மோட்டார் பம்பிங் செய்வதில் அடிக்கடி பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் இயங்கி வரும் "5 Pumping Station மற்றும் அண்ணாநகர் Lift Station–ல் உள்ள கழிவு மண்களை உரிய பாதுகாப்பு அம்சங்களுடன் அகற்றம் செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.8,50,000/–லட்சத்திற்கு பாதாள சாக்கடை திட்டத்தின் மூலம் பணிமேற்கொள்ள நகர்மன்ற நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு;** – மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.958**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 13**

இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகளுக்காக சாலைத்தெருவில் (Centre Clock அருகில்) நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான தார்சாலை

தோண்டி சேதப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பாதாள சாக்கடை பிரதான Pumping Station இந்திரா நகரிலிருந்து STP செல்லும் பணிக்கு Pumping Line இரட்டை ஆலை மரம் அருகில் உடைப்பு ஏற்பட்டதனை சரி செய்ய ஊரக வளர்ச்சி துறைக்கு சொந்தமான சாலையும் சேதப்படுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இரண்டு சாலைகளையும் செப்பணிட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.40/–லட்சத்திற்கு பணிமேற்கொள்ள நகர்மன்ற நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு;**</u> – மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 2326 /2019/இ1

<u>**தீர்மானம் எண்.959**</u>– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

<u>**பொருள் 14**</u>

இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, வள்ளல் பாரி நடுநிலைப்பள்ளி, அறிஞர் அண்ணா தொடக்கப்பள்ளி, எம்.எஸ்.கே.தொடக்கப்பள்ளி என நான்கு பள்ளிகள் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளிகளில் உள்ள கழிப்பறைகள் சுத்தம் செய்யவும், அதனை பராமரிக்கவும் தனியார் ஒப்பந்த அடிப்படையில் வெளிச்சந்தையில் பெற்று பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ள கீழ்கண்டவாறு

1. நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி – 2 பணியாளர்கள்
2. வள்ளல் பாரி நடுநிலைப்பள்ளி – 3 பணியாளர்கள்
3. அறிஞர் அண்ணா தொடக்கப்பள்ளி – 2 பணியாளர்கள்
4. M.S.K தொடக்கப்பள்ளி – 1 பணியாளர்

ஆக மொத்தம் 8 பணியாளர்களை வைத்து துப்புரவு பணிகள் மேற்கொள்ள, ஒப்பந்த அடிப்படையில் உத்தேச செலவினம் ஓராண்டுக்கு ரூ. 20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு;**</u> – மன்றம் அனுமதிக்கலாம்.

<u>**தீர்மானம் எண்.960**</u>– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

<u>**பொருள் 15**</u>

இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம் 2019–20, மனித ஆய்வு குழிகளுக்கு Frame–வுடன் கூடிய மூடி 40 " Nos வழங்கும் பணிக்கு 04.07.2019–ந் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| | வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் | மதிப்பீடு | வழங்கியுள்ள விலைவிகிதம் |
|---|---|---|---|

| வ.எண் | பெயர்கள் | லட்சத்தில் (ரூ) | கூடுதல் /குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1 | M/s.Hitech Tronics, Sri Balaji Electricals, No-42/31, Govindhan Road, Chennai – 600 033 | 1,75,000/- | **0.15%** சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி, ஒப்பந்ததாரர், இராமநாதபுரம். | 1,75,000/- | **1.10%** சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களில் குறைந்த விலைவிகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.Hitech Tronics, Sri Balaji Electricals,No-42/31, Govindhan Road, Chennai – 600 033, அவர்களது **0.15%** சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு;** – மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்; 2089/2019/இ1

**தீர்மானம் எண்.961**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 16**

இராமநாதபுரம் நகராட்சி பட்டிணம்காத்தான் பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் தெற்கு பகுதியில் சுற்றுசுவர் கட்டும் பணி நடைபெற்றது. இதில் கூடுதல் பணியாக தெற்கு பகுதியில் மேற்கியிலிருந்து சுமார் 106 மீட்டர் நீளத்திற்கு ஏற்கனவே கட்டப்பட்ட Beam மற்றும் துாண்களுக்கு நடுவே செங்கல் கட்டுமானம் செய்து, பூசி வர்ணம் செய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4,30,000/– லட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள நகர் மன்ற நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு;** – மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.        /2019/இ1

**தீர்மானம் எண்.962**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

தனிஅலுவலர் மற்றும்
ஆணையாளர்
இராமநாதபுரம் நகராட்சி